


பொறுப்பு

புரட்டாசி — ஐப்பசி 1980

மலர்: 6 ● இதழ்: 5

விலை: ரூபா 1/=


# நான்

ஓ உளவியல் ஏடு

# சிறப்பிதழ் - (Special Issue)

## தை — மாசி இதழ்

- கதைகள்
- கட்டுரைகள்
- கவிதைகள்
- கடிதங்கள்

இன்னும் இதர சுயபடைப்புக்களை "நான்" முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

**ஆசிரியர்**
வின்சன்ற் பற்றிக் B. Th.

**உதவி:**
ஜெயசிங்கம்
எஸ். எஸ். துரம்

**அமைப்பு:**
கார்டோசா

**ஆலோசகர்கள்:**
விக்ரர் குரூஸ் M.A., Ph.D.
பிரக்சிட் அன்ரனி M. A.

**சந்தா விபரம்**

ஓராண்டு சந்தா ரூபா. 7/—
ஈராண்டு சந்தா ரூபா. 13/—
( தபாற் செலவு உட்பட )

தபாற்கட்டளை அல்லது காசுக்கட்டளை மூலம் "நான்" முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

- பணம் பெறுபவர் பெயர்: "நான்" ஆசிரியர்
- பணம் பெறும் தபாற் கந்தோர்: அம்பிட்டி

**முகவரி:**
"நான்"
அ. ம. தி. பயிற்சியகம்
அம்பிட்டி.

# யார் அழுதால் ? என்ன

பெரியது ஒரு திருட்டில் அகப்பட்டு சிறைவாசம் செய்துகொண்டிருந்த மகனைப் பார்க்க வந்தாள் அவனது தாய். அவனை ஜன்னலருகே அழைப்பித்து, ஆத்திரம் தீரும்வரை அவள்து கையைக் கடித்துவிட்டு, மகன் கூறினான்.

''அம்மா, ஆரம்பத்தில் சிறு ஊசி ஒன்றைக் களவெடுத்துத் தந்தபோது என்னை இந்தக் கையினால் அடித்துத் திருத்தியிருந்தால் நான் இந்நிலைக்கு ஆளாகியிருக்கமாட்டேன். நான் பெரும் திருடனாகியதற்கு நீங்களே பொறுப்பு''.

ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் காரணிகள் இருக்கத்தான் செய்கின்றன. அக்காரணிகளில் சில அடிப்படையானவையாகவும் சில இரண்டாம் நிலையிலுள்ளவையாகவும் அமைந்துவிடுகின்றன. எம்மை முழுமைப்படுத்துவதில் அல்லது எமது உளச்சக்தியை ( psychicenergy ) வழிப்படுத்துதலில் சில காரணிகள் சாதகமானவையாகவும் சில பாதகமானவையாகவும் காணப்படுகின்றன. எனினும், ஈற்றில்

''ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே''

— பழமொழி மறைய,

''ஆவதும் எம்மாலே, அழிவதும் எம்மாலே''

— புதுமொழி பிறக்கிறது.

அதாவது, வாழுவதற்கும் வாழவைப்பதற்கும் அன்றேல் மாளுவதற்கும் மாளவைப்பதற்கும் நாமே பொறுப்பு.

''யார் அழுதால் என்ன, யார் சிரித்தால் என்ன'' என்று ஏனோதானோ நிலையில் நாம் இருந்துவிட்டால் எல்லாம் சுலபமாகி விடுமோ? பொறுப்பின் சுமைக்கு அஞ்சி வெறுப்பைச் சம்பாதிப் பேர்மா ?

— ஆசிரியர்.

# இறைவனுக்கு ஒரு கடிதம்

S. D. B. சுரையா.

இறைவா! உன் நாடக மேடையில் எத்தனை நாட்கள் என்னை ஆடவிட்டு வேடிக்கை பார்ப்பாய்? இதற்கு ஒரு முடிவில்லையோ? வறுமைதான் என் பாத்திரமென்றால், நான் வாழ்ந்தது போதும். எனக்கு விடுதலை கொடு. காலம் கடந்த வாழ்வு எனக்கு இனிமை தராது. எனக்கு வேண்டும் விடுதலை.

தாய் வயிற்றில் உதித்தபோது தாய்க்கு, பாரம், மண்ணில் விழுந்தபோது மண்ணுக்கு, பாரம். தாய் கூடையின் பாரம் தாங்கி, தகப்பன் கடனின் பாரம் தாங்கி என்னை வளர்க்க . . நான் எலும்புக்குள் தோலாக வளர்ந்தேன். அழகான துணியை உடம்பு கண்டதில்லை. ருசியான ஊணை நா சுவைத்ததில்லை. பஞ்சு மெத்தையை மேனி கண்டதில்லை. நாலு கால்களில் வரும் என் தந்தையின் நட்டுவாங்கமில்லா நடனத்தையும் அதற்கு என் தாய் இசைக்கும் அழுகை எனும் நாதத்தையுமே என் கண்கள் கண்டும் என் செவிகள் கேட்டும் இருக்கின்றன.

என்னை சுமந்த சுமைதாங்கி நிலம்நோக்கி சாய ''தாயற்றவள்'' என்ற பெயர் எனை நோக்கி சாய்ந்தது. கொழுந்துக்கு உரமானவளை நிலம் தனக்கு உரமாக்கிக் கொண்டது. பருவ மகளான என்னை இயற்கை அன்னை கைநீட்டி அணைத்துக்கொண்டாள். அவளின்

மடியில் துள்ளி விளையாடிய நாட்கள் எத்தனையோ..? பறவைகள் தமது பாடல்களுக்கு கூலிகேட்கவில்லை. காட்டாற்று வெள்ளம் என்னை ஏழையென ஒதுக்கித் தள்ளவில்லை. நறுமண மலர்கள் என்னை வரவேற்கு மாப்போல் அவைகளது முத்துப்பற்களை காட்டி சிரித் தன. நானும் சிரித்தேன். ஆ!... சிரித்தது விளையாகி விட்டதோ?... என் கிழ தந்தைக்கு நான் ஒரு சுமை தாங்கியானேன். கல்வி ஒரு கனவாக, செல்வம் ஒரு கற்பனையாக நான் ஒரு கருவியாகி கூடைதாங்கி மலை யேறியேன். பாரம் தாங்கியே வாழ்ந்து பழகிவிட்ட எனக்கு கொழுந்து கூடை ஒரு பாரமல்ல. வயிற்றுப் பசிக்கு முன்னால் மலையாவது, மடுவாவது. இடியும் மின்னலும் எனது தோழர்கள். என் தலையில் விழுந்த இடியைவிடவா இது பெரிது.

தனியே, கூடையின் பாரம் போதாதென்று குடி யும் குடித்தனமும் வேண்டுமென்று என்னைப்பார்க்க குடிமகனை அழைத்து வந்தான். ஏழைதானென்றாலும் இளமை கனவு எதற்கு ஈடாகும்?. திருமணநாளன்று எனக்கு இசைத்தவனோடு நான் பறந்தபோது... அப் பப்பா!... இவ்வுலகம்தான் எவ்வளவு இன்பமயமா னது. நான் மயங்கிநின்றேன்.

என்னை அரிய உலகிற்கு அழைத்து சென்ற அவர் வேலைக்காக வேறூர் சென்றபோது நான் கலங்கி நின் றேன். பிரிவுத் துயர் என்னை அனயற்பட்ட மெழுகாக உருக்கியது. நாட்கள் வாரங்களாக, வாரங்கள் மாதங் களாக, மாதங்கள் வருடங்களாக காலங்கள் உருண் டன. சென்றவன் வரவேயில்லை. மண் குதிரையை நம்பி ஆற்றில் விடப்பட்டு தவிர்ந்தேன். இனி எனக்கு அடைக் கலம்... அது ஒரு கேள்விக்குறி. அப்போது என் தந்தை இறந்த செய்தி இடியாக என்னை தாக்கியது. உற்றாரும் உறவினரும் என்னை வெறுக்க, நடுற்றில் விட்ட படகு போல் அலைமோதுண்டேன்.

வாழ்க்கை சுமையோ குருவிதலையில் பூசனிக்காயாக என்னை அமிழ்த்தியது. தலையிலே கூடையின் சுமை .... மனதிலே வாழ்க்கையின் சுமை ... வயிற்றிலே குழந்தையின் சுமை ... இறைவா! ... என்னால் முடியாது இதனை சுமக்க முடியாது. எனக்கு விடுதலை வேண்டும். வாழ்க்கையில் நான் சாதித்தது எதுவுமில்லை. ஏனெனில் இனி எனது உடம்பில் பலனேதுமில்லை மண்ணுக்குப்பாரமாக இருப்பதைவிட மடிவதே மேல். யானாக மாய்த்துக்கொள்வேனாகில் ஊர் வாய்க்கு அவல் கிடைத்தது போலிருக்கும். தானாக மடிவதே அடியேனின் விருப்பு. அதற்கு வழிகாட்ட வேண்டியது உன்பொறுப்பு. இதற்கு நன்றி செலுத்துவது என் பொறுப்பு.

இப்படிக்கு

உன் படைப்பு.


எமது அடுத்த வெளியீடு



# உளப் பிறள்வு

( Abnormality )

உங்கள் ஆக்கங்களை உடனே அனுப்பிவையுங்கள்

சிறுகதை

# ஒரு கிராமம் அழுகிறது!!!

— இணுவை துரை எங்கரசு B. A. —

சுந்தரேசன் ஏகாந்தக் களிப்பில் திளைத்திருந்தான். அவனுக்கு ஒரு வாத்தியார்த் தொழில் கிடைத்ததுதான் காரணம். வாத்தியார்த் தொழிலிலுள்ள சுகபோகங்களை எண்ணிப் பார்த்தான். நிறைய லீவுகள் இருக்கு, பிள்ளையளை கட்டாயம் படிப்பிக்க வேணுமெண்ட சட்டம்..... ஏதோ நாங்கள் சொல்லிக் குடுக்குறதை கேட்டால் சரி.

அவன் நினைவுகள் சிதறடித்துக்கொண்டிருந்தன ....

பாவம்; சுந்தரேசனுக்கு ஒரு வாத்தியார் தொழிலிலுள்ள புனிதம், தாரண்யம் என்ன தெரியப் போகுது. ஊரில உள்ள வாத்தியார் பிள்ளையளைப் பேக்காட்டிப் போட்டு தோட்டம் செய்யுறதும், தங்கட எடுபிடி வேலையளுக்கு அதுகளை அனுப்புறத்தையும் தான் அவன் கண்டிருக்கிறுன்.

இவனும் பொறுப்புகள் இல்லாமல் வளர்ந்தவன். கஸ்டம் தெரியாமல் சீவிச்சவன். ஏதோ குதிரை மாதிரி ஓடியோ, கழுதை மாதிரிச் சுமந்தோ தராதரப் பத்திரமற்ற ஒரு வாத்தியாகிவிட்டான். இவனுக்கு எப்படி சேவை மனப்பான்மை தெரியப்போகுது!

புதிதாக நியமனம் பெற்று இன்றுதான் அந்தக் கிராமத்துக்கு காலடி யெடுத்து வைக்கிறுன். அவனது கைகளிலுள்ள பெரிய சூட்கேசுகள் நீண்ட பிரயாணம் ஒன்றை நினைவுறுத்துவனவாக உள்ளன. எவரோ ஒருவர் திசையை காட்டியிருக்க வேண்டும். பழக்கப்பட்ட ஒரு பாதையில் பயணம் செய்பவன் போல நடக்கிறுன்.

நிமிர்ந்து நாற்புறமும் கண்களை மேயவிட்டான். கண்ணுக்கு கிட்டியதாக இதுவரை எந்த ஓலைக்குடிசை கூடப் புலப்படவில்லை. இதுவரை அவன் ஒருகல் தொலைவுவரை நடந்திருப்பான். இன்னமும் நடக்க வேண்டி இருக்குதே'' அவன் மனம் அலுத்துக்கொள்கிறது. அலுத்து என்ன செய்வது. இந்த நாளையில ஒரு தொழில் தேடுற தெண்டால் எவ்வளவு கரைச்சல்! தொடர்ந்து நடக்கிருன்.

கண்களை கூர்மைப்படுத்திக்கொண்டான். இப்போது அவன் கண்களுக்கு சிறுசிறு குச்சு வீடுகள் தென்படுகின்றன. மனச்சோர்வு மெல்லியதாக அகல்கின்றது. தன் நடையின் வேகத்தை அழுத்துக் கொள்கிருன். போட்டிருக்கும் உடைகளையெல்லாம் கழற்றிவிட்டு சிறிது நேரம் ஆறுதலாக இருக்க வேண்டும் என்ற அவா .. உடலிலும் மெல்லிய பசி.

அந்த சின்ன வீடுகளை அவன் இப்போது அடைந்து விட்டான். அங்கு, அனேகமான சிறுவர்கள் பிறந்த மேனியர்களாகவே காணப்பட்டார்கள். சிறுமிகள் சிலர் மாங்கொட்டைத் தாளம் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

பன்னிரண்டு வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவன் சுந்தரேசனைக் கண்டதும் ஏனைய கூட்டாளிகளையும் கூப்பிட்டான்.

''இவர்தான் எங்கட புதுவாத்தியார் போல இருக்கு''

அவன் உரக்கக் கூவினுன். ஏனையவர்களும் சுந்தரேசனை அடையாளங் கண்டு கொண்டார்கள் . . .

உற்சாகப் பட்டார்கள் . . . எல்லோருமாய்ச் சேர்ந்து ஆர்ப்பரித்தார்கள். சுந்தரேசன் அணிந்திருந்த கண்ணுடியும், நீட்டிவிடப்பட்ட மீசையும் சிறுவர் சிலரை பீதிக்குள்ளாக்கினது.

''டே அவரைப் பாத்தா பொல்லாதவர் போல இருக்கடா''. சத்தம் போடாதையுங்கோடா, எங்களை அடிச்சு சாக்கொல்லிப் போடுவாரடா''.

இன்னொரு சிறுவனின் கண்டிப்பான இக் குரலைக்கேட்ட எல்லோரும் அமைதியடைந்தார்கள். பூனையைக் கண்ட எலிகள் போல பதுங்கத் தொடங்கினார்கள். ஒருவர் பின் ஒருவராகப் பின்வாங்கவும் தொடங்கிவிட்டார்கள்.

குழந்தைகளின் கூக்குரலால் பிள்ளைகளின் பெற்றோரும் ஒழுங்கைக்கு வந்துவிட்டார்கள்.

''என்ன ஐயா யோசிக்கிறீங்க. பள்ளிக்கூடத்துக்குத் தான போறீங்க இப்பிடியே போனா, கொஞ்சம் கூப்பிடு தொலைவில தான் பள்ளிக்கூடமிருக்கு. நானும் உங்களோட வாரனுங்க.''

பெரிய மனிதர் ஒருவர் வழிகாட்டிக்கொண்டு போகிறார். வேறு சில பெற்றோர்களும் வாத்தியாரைப் பின் தொடர்கிறார்கள்.

விளையாடிக்கொண்டிருந்த பிள்ளைகளெல்லாம் இப்போது பாடசாலைக்கு போவதற்கு தங்களை தயார்படுத்திக் கொள்கிறார்கள். அவர்களுக்குள் ஒரே மகிழ்ச்சி. படிப்பதற்கோ அல்லது அங்கு வழங்கப்படும் பிஸ்கட்டுக்களிலுள்ள அவாவோ தெரியவில்லை. அவர்களும் புத்தகம், கொப்பிகளுடன் பாடசாலையை நோக்கி நடக்கிறார்கள்.

பாடசாலை வளவுக்குள் நுழைந்த சுந்தரேசனுக்கு அதன் சூழல் ஒரு சுடுகாடாகவே தென்பட்டது. இங்குமங்குமாக மரங்கள், பற்றைகள், புற்கள் . . . சொண்டைக் கடித்துக் கொண்டான். ஒற்றையடிப்பாதைகளைப் பின்பற்றி பள்ளிக் கூடத்துள் நுழைந்தான். வௌவாலின் எச்சங்கள், குப்பை கூழம், சிலந்திக் கூடுகளால் நிறைந்திருந்தது அக் கட்டிடம். ஓலையால் வேயப்பட்ட பாடசாலையின் கூரை இந்திரனின் ஆயிரம் கண்களை தனதாக்கிக் கொண்டதுபோல் காட்சியளித்தது.

ஒரு மூலையில் குந்தி கண்களை இறுக மூடிக்கொண்டான் நடந்த களைப்பால் அவன் எந்த ஒரு முடிவுக்கும் வரும் நிலையில் இல்லை.

சிறிது நேரம் தான் இப்படி இருந்திருப்பான். கண்களை அகல விரித்தான். அவன் கண்முன்னே ஒரு பெரிய சனக்கூட்டம். அந்த கிராமமே திரண்டுவிட்ட பிரமை.

ஒவ்வொருவரும் தம்மாலியன்ற உதவிகளைச் செய்து கொண்டிருந்தார்கள். காடுகளை அழிப்பவர்களும் பாடசாலையைக் கூட்டிப் பெருக்குவோராகவும் காணப்பட்டனர். சிறுவர்கள் ஆற்பாட்டமாகக் காணப்பட்டார்கள்.

''வாத்தியார் முகத்தைக் கழுவிப்போட்டு தேத்தண்ணியைக் குடியுங்கோ.''

ஒரு பெண்ணின் புதுக்குரலைக் கேட்டு சுயநினைவுக்கு வந்த சுந்தரேசன் அவள் செம்பு நிறைந்த நீருடனும் தேநீர் குவளையுடனும் நிற்பதைக் கண்டு வியந்துவிட்டார்.

அவர்களின் அன்புக் கட்டளையை அவரால் நிராகரிக்க முடியவில்லை. அவருக்கும் தற்போதைய நிலையில் அவை அவசியமானவையாகவும் தெரிந்தது. களைப்பாறிக் கொண்ட சுந்தரேசனுக்கு காலை ஆகாரமும் வரவழைக்கப்பட்டது.

பாடசாலையை துப்பரவு செய்வதில் ஈடுபட்டிருந்த பெற்றோரும் பிள்ளைகளும் ஒய்வெடுத்துக்கொண்டார்கள். தம் குறைகளைச் சுட்டிக் கதைக்க இதுதான் சந்தர்ப்பம் என அறிந்தவர்கள் ஆசிரியரை அண்மினார்கள்.

''வாத்தியார்'' அவர் விளிக்கிறார் . . . ஊரில் பெரியவர் என்ற நன்மதிப்பைப் பெற்ற ஒருவர் முன் வந்திருக்கிறார். இவர் விளித்ததை சுந்தரேசன் பார்த்தான்.

இந்தப் பள்ளிக்கூடம் எங்கட பாட்டன் காலத்தில கட்டினது. ஆனா படிப்பு அரசாங்கம் எடுத்த அன்னேல இருந்து இதுவரைக்கும் ஒழுங்கா நடந்ததில்ல. வருகிற வாத்திமாரும் ஒருகிழமை, ஒரு மாதம் படிப்பிக்கிறது ஐமிச்சம். எல்லாரும் விட்டுவிட்டுட்டுப் போறாங்க. எட்டத்திலயிருந்து ஒரு வாத்தியாருக்கு இங்குள்ள வசதிகள்

போதாது எங்கிறதை ஒத்துக் கொள்ளுறம். ஒரு கடைக்கோ, அல்லது பஸ் பிடிக்கவோ வேணுமின்னு ஒண்ணரை கல் தொலைவு வரையில போயாகணும். இந்த வசதியீனங்களுக்கு நாம ஒண்ணையும் செய்ய ஏலாது. அரசாங்கமா ஏதும் செய்யுற வரையில காத்திருக்கணும். மத்தப்படி உங்களுக்கு வேண்டிய சகல உதவி ஒத்தாசைகளையெல்லாம் செய்யுறதுக்கு நாங்க இருக்கிறம். சமையல் சாப்பாட்டையும் நாங்களே கவனிக்கிறம். உங்க கூட காவலுக்குக் கிடக்கிறதென்றாலும் நாங்கள் தயாராயிருக்கிறம்.

ஆறு; தம்பி,! ராசா! . . . . வாத்தியாரையா! . . . . நீங்க இங்க தொடந்து இருக்கணும் . . . எங்க பிள்ளைகளுக்கெல்லாம் ஒழுங்காப் படிச்சுக்குடுக்கணும்.

எங்க கிராமத்தில இதுவரை ஒழுங்காப் படிச்சவங் ஒருவனுமில்ல. அப்பிடி ஒருத்தன் கிடைச்சிட்டானெண்டா . . . அதுவரையில கஸ்ரம்தான் . . . நீங்க பெரிய மனசு பண்ணி நடந்தா எங்களுக்கு வசதியா இருக்கும்.

பெரியவரின் பேச்சைக் கேட்டான். அவருக்குள்ள அக்கறையை எண்ணிப்பார்த்தான். அவர் மட்டுமல்ல; அந்த கிராம மக்கள் எல்லாருமே வந்து செய்த உதவிகளை எண்ணிப்பார்த்தான்.

அவன் மனதிலும் இனமறியாத உணர்வுகள் புல்லரித்தன. அந்தக் கிராமப் பிள்ளைகளுக்காகவும், பெற்றோர்களுக்காகவும் இரக்கப்பட்டான். அவன் இரக்க உணர்வுகள் நரம்பு அறுந்த வீணையாகியது. பாடசாலை தினவரவு பதிவேட்டைப் பார்த்ததுதான் அதற்குக் காரணம்.

அங்கு வகுப்புக்கள் ஐந்து வரையில் காணப்பட்டது. ஒவ்வொரு வகுப்பிலும் பத்தென்றும், பன்னிரண்டு, ஐந்து பிள்ளைகள் என்ற எண்ணிக்கையைக் கொண்டனவாகக் காணப்பட்டன. மொத்தம் நாற்பது பிள்ளைகள் மட்டுமே அப்பாடசாலையில் படிப்பவர்கள்.

இவர்கள் எல்லாருக்கும் ஒரே ஒரு வாத்தியார்தான் படிப்பிக்க வேண்டும். குழப்படிப் பிள்ளைகளை மேய்ப்பது எப்படி பாடம் படிப்பிப்பது எப்படி?

ஒரு இரவு தான் பாடசாலை மண்டபத்துள் தனக்கென ஒதுக்கப்பட்ட அறையுள் தங்கினுன். அந்த ஒரு இரவே அவனை அலுக்க வைத்துவிட்டது.

தீர்க்கமான ஒரு முடிவை எடுத்துவிட்டான். சுந்தரேசன் விடிந்ததும் தனது உடுப்புக்களை மடித்துக்கொண்டு சூட்கேசுக்குள் அடுக்கிக்கொண்டான். பயணத்தை தொடங்கிவிட்டான். அதே ஊர் பெரியவர்கள், பிள்ளைகள் கூடி விட்டார்கள்.

''வாத்தியார் என்ன திடீரென்று திரும்பிவிட்டீங்கள். ஏதேன் அவசரம்'' அவர்கள் இரக்கபாவனையில் கேட்கிறுர்கள். அவன் முழுங்குருன் . . . நான் அவசரமா ஒருக்கால் கல்விக் கந்தோருக்குப் போக வேணும் . . . அவர்கள் முளிக்கிறுர்கள் . . . வேறு எதுவும் கேட்க விருப்பமில்லாமல் பின் வாங்குருர்கள் . . .

பெரிய இடத்துப்பிள்ளை இந்தக் கஸ்ரப்பட்ட பகுதியில் படிப்பிக்க மாட்டான் . . . . பழக்க வழக்கமில்லாத மக்களுடன் எப்பிடி சீவிக்கிறது . . . நாகரீகம் போதாது தன்ர ஸ்ரேறரஸ்சைவிட்டு எப்பிடி கீழ இறங்குகிறது.

எவரையோ பிடித்து அவன் ரவுன் பாடசாலைக்கு மாறிவிட்டான். நீண்ட நாட்களாக மூடியிருந்த பாடசாலை தொடர்ந்தும் தூங்குகிறது . . .

பிள்ளைகள் முன்பு எப்படியோ . . . இப்பவும் அப்படித்தான் . . . பள்ளிக்கூடத்தை மறந்துவிட்டார்கள் . . . தந்தைமாருடன் வளர்ந்தவர்கள் வயல்களில் வேலை செய்கிறுர்கள். சிறுவர்கள் ஓடியாடி விளையாடுகிறுர்கள் . . . சிறுமிகள் மாங்கொட்டைத் தாளம் போடுகிறுர்கள் . . . பெற்ருேர்கள் அழுகிறுர்கள். **(யாவும் கற்பனை)**

# வாசகர் அறிமுகம்

என் பெயர்: **நிறஞ்சன்** | ஊர்: **வவுனியா** | வயது: **18**



எனது பெற்றோர்கள் மணம் முடித்த 25ம் வருடத்தில் பிறந்த நான் 10வது வயதில் தந்தையை இழந்தேன். எங்கள் குடும்பத்தில் ஒரே பிள்ளையான நான் தாயாரின் அரவணைப்பில் செல்லமாக வாழ்ந்து வந்தேன்.

க. பொ. த. உயர்தர வகுப்பு படித்துக்கொண்டிருந்த பொழுது . . . எனது வாழ்க்கைத் துணைவியின் தேர்வில் சித்தியெய்தினுள் நாயகி ஒருத்தி. அவளின் ஊர் சாவகச்சேரி. எனக்குக் கிடைத்த அவள் மாதர்குல மாணிக்கம். எனது குற்றங் குறைகளை அன்பாகக் கண்டித்தாள். பலர் என்னை அதிகாரத்தால் கட்டுப்படுத்த முயன்று தோல்வி கண்டார்கள். அவளோ அன்பினுல் என்னை வென்றுவிட்டாள். நாங்கள் இணையப்போகும் மணவாழ்க்கையை சிறந்த முறையில் அமைக்கும் அவசியத்தை அடிக்கடி எடுத்துக் கூறினுள். இப்படியாக வளர்ந்த காதல் வாழ்க்கைக்கு வந்தது துன்பம். அன்று அவளை விட்டுப் பிரிந்தபொழுது அவள் கூறிய வார்த்தைகள்: ''நிறஞ், மனதை தளர விடாதீர்கள். உங்களுக்காக நான் ஆயுள் பூராகவும் காத்திருக்கத் தயார் . . .'' எனக்காக ஓர் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை எண்ணும்போது எனது தற்போதைய சிறை அனுபவமும் ஒரு சுவையாகத் தோன்றுகின்றது.

**அன்பு நிறைந்த நிறஞ்சன்**

# உயிர்

# பிழைத்துவிட்டேன்

——( சிறுகதை )——

இது "HONDA 125" தான். நான் எனது தந்தையாரிடம் கடந்த ஆறுமாத தவமிருந்து இன்று பெற்றுக் கொண்ட மோட்டார் சைக்கிள் ஆகா! என்ன அருமையான மோட்டார் சைக்கிள்! அழகிய சக்கரங்கள்; அருமையான நிறம்! ஆர்வமிக்க வேகம்! அமர்ந்து சென்றால் என்ன சுகம்! அப்பப்பா!

ஆரம்பம் பத்து கில்லோ மீட்டர். வேகம் படிப்படியாக உயர்கிறது. இருபது. ஆம், நான் இப்போ அதன் வேகத்தை அதிகரிக்கிறேன். எண்பது தொண்ணூறு, கூடிக்கொண்டே போகிறது. கொழும்பு எல்லையை வந்தடைந்தேன்.

நண்பன் கூறுகின்றான்: சார்ள்ஸ், சற்று மெதுவாக ஓட்டு, எதிரில் பொலிஸ்காரர்கள் இருப்பார்கள். 'என்ன மச்சான் பொலீஸ்? நான்கூட ஒரு காலத்தில் பொலீஸ் தான். கூறிக்கொண்டே விசையை அதிகரிக்கிறேன். இப்போது மோட்டார் சைக்கிள் பறப்பது போன்ற உணர்வு. ஆம், கொழும்பின் புதுப் பாலத்தின் வழியாக விரைகின்றேன். எதிரே உள்ள ரவுண்டபோட்டை அண்மிககிறேன். எதிரே நான் கண்டது:

கடந்த வருடத்தில் வாகனங்களினால் மோதுண்டு இறந்தோர்க்ளின் தொகை: 435 பேர்.

காயமுற்றோர் தொகை: 715. இதற்கு நீங்கள் பொறுப்பாளிகளா?

என்ற வாசகங்களைக் கொண்ட பெரும் கரும்பலகை.

இதை கண்ணுற்ற நான் சிந்திக்கிறேன். இதே வேகத்தில் போய்க் கொண்டிருந்தால், எனக்கும் என்ன நேருமோ? ஒரு நிமிடம், ஆம், ஒரே ஒரு நிமிடம்தான். ஐயோ! நான் எதிரே வந்துகொண்டிருந்த பையன் மீது சைக்கிளை மோதவிட்டு விட்டேன். நண்பனும் நானுமாக வீசப்பட்டு விடுகின்றோம். என் தலை சில் லிட்டுக்கொண்டு வருவதை உணர்கின்றேன். அத்தோடு என் சுயநினைவையும் இழந்தேன்.

நான் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் 'எக்சிடன்ட் வார்ட்'டில் (Accident Ward) இருப்பதை உணர்கி றேன். ''நான் இங்கே எப்படி வந்தேன்? நண்பன் என்ன ஆனான்? சைக்கிளில் மோதுண்ட பையன் நிலை என்ன?'' பக்கத்திலிருந்த நேசிடம் கேள்வி மேல் கேள்விகள் கேட் கிறேன். அவர் சொல்கிறார்: உடம்பை அலட்டிக்கொள் ளாதீர்கள். மனதை தைரியப்படுத்தி கொள்ளுங்கள். உமது நண்பனும் அடிபட்ட பையனும் அதே இடத்தில் இறந்துவிட்டார்களாம். நீங்கள் தெய்வாதீனமாக உயிர் பிழைத்திருக்கிறீர்கள். அவன் கூறிமுடிக்கவில்லை ஐயோ! இவர்கள் இவர்களினதும் மரணத்துக்கு நான்தானே பொறுப்பு! ஐயோ! அம்மா! கத்துகிறேன்.

அம்மா, ''என்ன தம்பி கெட்ட கனவேதும் கண் டாயா?'' என்றபடியே காலைத் தேனீரோடு கட்டிலரு கில் வருகிறாள். நான் கண்களைத் திறக்கிறேன். இப் போது நான் வழமையாக படுத்திருக்கும் கட்டிலில் இருப்பதை உணர்கிறேன். பக்கத்தில் நான் இரவு படித்த ''HONDA'' மோட்டர் சைக்கிள் புத்தகம் என் னைப் பார்த்துச் சிரிக்கிறது.

கற்பனை செய்தவர் - கண்டி வெரோ

# நான் பதில்

**கே:** 17 வயது இளம் மங்கையான எனக்கு எப்பொழுதும் வீட்டிலிருந்து ஏமாற்றமே கிடைக்கின்றது. எனது பெற்றோர் பணத்தாசை கொண்டு பேயாகத் திரிகின்றார்கள். குடும்ப நலன், சமுதாய வளர்ச்சி இவை எவற்றிலும் அக்கறையில்லாத இவர்களோடு கூடி வாழ்வது எனக்கு நகர வேதனையாக இருக்கின்றது. அடிக்கடி பொய் பேசுவதோடு என்னையும் சிலதடவைகளில் பொய்பேச வற்புறுத்துவார்கள். உதாரணமாக, அப்பாவைத் தேடி யாரும் வந்தால், அப்பா வீட்டினுள் இருக்கையில், ''இல்லை'' என்று கூறும்படி என்னிடம் கட்டளையிடுவார்கள். ''நான்''ஏ எனக்கு விடை தருவாயா?

—பாக்கியவதி, நெடுந்தீவு

**ப:** பாக்கியவதி, உம்மைப்போன்று பல இளைஞர்கள் இன்று பெற்றோரின் அசட்டையீனத்தாலும் நேர்மையின்மையாலும் வருந்துகின்றார்கள். சிலருக்கு, பொய் கூறுவது கைவந்த கலையாகிவிடுகின்றது. எடுத்ததற்கெல்லாம் பொய் பேசுவது அவர்களது பழக்கம், ''அவர் இப்பதான் வேலையிலிருந்து வந்திருக்கிறார்; கொஞ்சம் சுணங்கி வாருங்க'' என்று சொல்ல என்ன வெட்கமா? இல்லை, அச்சமா? இத்தகைய நிகழ்ச்சிகள் இளைஞரின் உள்ளங்களை நெகிழ்ச்சிப்படுத்துவதோடு அவர்களது உளவளர்ச்சியைப் பாதிக்கின்றன. இப் பெற்றோர்களின் அனுபவம் இறுதியில் வேலியே பயிரை மேய்ந்த கதையாகத்தான் முடிகின்றது. தம்பிள்ளைகளின் நல்வாழ்வுக்காக பிரயாசைப் படுகின்றோம் என்று கூறும் பெற்றோர்கள் இப்படி இளம் உள்ளங்களை வருத்துவது தகுமா?

எனவே, தங்காய், மனம் தளரவேண்டாம். கெட்டியான மனத்தோடு பொய், போலி போன்றவற்றை எதிர்த்து, எதிர் நீச்சல் போட்டு வெற்றிகாண்பதில்தான் உந்தன் மகிழ்ச்சி தங்கியுள்ளது.

# ஓடும் ரயிலில்

—தொடர்ந்த சிந்தனை

அன்று ஞாயிறு நாள். என்றும்போல் அன்றும் புகை யிரதம் நிறைந்திருந்தது. ஏறும் படிக்கட்டுகளில்கூட பிர யாணிகள் தொங்கியபடி பயணம் செய்தார்கள். நெருக்கடி யான அவ்வேளையில் நெருக்கயடித்தபடி வாசலுக்கு விரைந் தாள் ஓர் இளம்பெண். ஓடும் இரயிலில் வாசலை நோக்கி ஓடிவருபவளை யார்தான் விட்டுவைப்பார்! அவள் கரத்தை எட்டிப்பிடித்தார் ஒரு பெரியவர். ''என்னம்மா செய்யத் துணிந்தே?'' என்று அக்கறையோடு கேட்கின்றார் அப் பெரியார். அவளோ முரண்டு பிடித்தபடி எதை எதையோ சொல்கின்றாள். 'பெற்றோர்கள் கண்டிப்பாம், அவன் அழ கைப் பருகத் துடிப்போர் தொல்லையாம், வாழ்க்கையில் பொருளில்லையாம்.' ''என்ன இருந்தாலும் இன்றைய பிள் ளைகள் பொறுப்பில்லாமல் நடந்துகொள்ளக்கூடாது'' என் றபடி பெரியார் அவளுடன் உள் நுழைந்தார். இரயில் தொடர்ந்து ஓடுகின்றது; என் சிந்தனையும் தொடர்கின்றது.

வாழ்க்கை என்ற இரயிலில் பயணம் செய்வோர் பலர். அதில் சுயமை, சுயநிர்ணயத்துடன் வாழவேண்டும் என்பது இளம்பயணிகளின் வேட்கை. சுதந்திரத்தை நாடுவோர் பொறுப்புணர்ச்சியுடன் வாழ்வதில்லையே என்பது முதிய பயணிகளின் ஏக்கம், இதில் யார் சரி, யார் பிழை என்ற வாதம் எமக்கு வேண்டாம். ஆனால், இதில் எது, எவ்வ ளவுக்கு வாழ்க்கை என்ற பயணத்தில் வெற்றிகாண எமக் குத் தேவை என்பதுதான் முக்கியமாகும்.

இளைஞர்கள் வாழவேண்டியவர்கள்; வளர வேண்டியவர் கள்- இவ்வளர்ச்சி அறிவை, ஆற்றலை, உள்ளத்தை, சமூகத் தை ஒருங்கிணைந்ததாக அமைதல் அவசியம். வளர்ச்சி முழு மைபெற அது மனிதனை முழுமையாக உள்ளடக்கவேண்டும்.

அத்தகைய வளர்ச்சியினைப் பெற ஒரு சுதந்திர சூழல் தேவைப்படுகின்றது. அந்தளவில் இளம் பயணிகளின் சுதந்திர வேட்கை சரியானது; அவர்களுக்கே உரியது. தனித்துவம் மிக்கது. அதேவேளை, சுதந்திர வேட்கை என்பது நினைத்ததையெல்லாம் நிறைவேற்றுவதற்குக் கிடைத்த அனுமதியல்ல. எதையும் செய்ய உரிமை உண்டு ஆனால் எல்லாமே பயன் தருமா?

நீண்ட இரும்புப் பாளங்களில் ஓடும் இரயில், பாதையில் இருக்கும் கைகாட்டியை, சிவப்பு, மஞ்சள், பச்சை விளக்குகளைக் கவனிக்கவில்லையென்றால் பயணம் விபரீதமாக முடிந்துவிடும்; பயணிகளின் வாழ்க்கைக்கு உலை வைத்துவிடும். இளையர்களின் வாழ்க்கையிலும் இலக்கையடையவேண்டும் என்ற பொறுப்புணர்ச்சி இல்லையென்றால் சமுதாயம் என்ற பரந்த பயணிகளின் கூட்டத்திற்கு பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்ற கடமையுணர்ச்சி இல்லையென்றால் வாழ்க்கை என்ற இரயிலும் தடம் புரண்டுவிடும்; விளைவு விபரீதமாகிவிடும்.

அலைமோதும் இளமையுணர்வுகள், அடிக்கடி பூதாகரமாக உருவெடுக்கும் இதயத் துடிப்புகள், எதிர்காலம் பற்றிய ஏற்றம்மிகு ஆசைகள் — இத்தனையின் அனுபவமும் எமக்கு உண்டு. இத்தனையும் இளமையின் இயல்பான நாட்டங்கள். இவை நம்மை வளர்க்க வேண்டும். இவற்றை நாம் ஆட்கொள்ளவேண்டும்.

'சுவையை நம்பி மீன் தூண்டியில் சிக்கிக் கொள்கிறது.

கண்கொண்டு தீயில் பற்றுவைத்து விட்டில்பூச்சி அதில் வீழ்ந்து மாய்கிறது.

ஊறு அல்லது ஸ்பரிசத்தை நம்பி யானை பிடிபடுகின்றது.

ஓசைக்கு அடிமையாகி மான் பிடிபடுகின்றது.

மணத்தை நம்பி வண்டு மலரில் அகப்படுகின்றது.

இவ் ஐம்பொறிகளையும் உள்ளடக்கியவனே மனிதன். பொறுப்பற்ற விதமாக இவ் ஐம்பொறிகளின் செயற்பாட்டிற்கும் அடிமையாகிவிட்டால் வாழ்க்கை அழிவின் பாதைக்கு இட்டுச் செல்லப்படும். அங்ஙனம் இளைஞர் வாழ்க்கை அமைந்து விட்டால் நாளைய சமுதாயத்தின் கதி என்னவது?

இன்றைய சமுதாயம் ஊழல் நிறைந்தது; இடர்பாடுகளும் குறைபாடுகளும் மலிந்தது. குடியும் கூத்தியமும் வளர்கின்றன. ஒரு சாராருக்குக் குடை பிடிப்போர் பெருகின்றனர். இப்படி எத்தனை! அத்தனைக்கு மத்தியிலும் எப்படி வாழ்வது? இவர்களை ஒழித்தாலொழிய புதுவழி பிறக்காது என்று இளைஞர்கள் சிந்திப்பதுண்டு. பயிர் உயர, உயர, கூட இருக்கும் முட்பூண்டுகளும் உயர்ந்து வளர்கின்றன. சமுதாயம் என்ற விளை நிலத்தில் மேற்கூறியவையும் அப்படியே! அதற்காக வாய்பொத்தி, வாய்மையிழந்து, வாழாவெட்டியாக வாழவேண்டுமென்பதில்லை. இவற்றை தடைசெய்ய முடியாதபோது வாழ்க்கையை விட்டு, ஒதுக்கிடம்தேடி ஓடவேண்டியதில்லை. மாறாக, எதைத் தடை செய்ய விரும்புகின்றோமோ அதிலிருந்து எம்மையே தடுத்துக் கொள்வோம்.

ஆகா! ஞாயிறு இரயில் தன் இலக்கை அடைந்துவிட்டது. அனைவரும் அவசரம் அவசரமாக, அல்லோலகல்லோலப்பட்டு இறங்குகின்றனர். இவர்களுக்கும் எத்தனை அலுவல்களோ! வாழ்க்கைப் பயணிகளான எமக்கும் எத்தனை அலுவல்கள்! அத்தனையும் நன்மையளிப்பவையா? ஆக்கத்தைத் தருபவையா? ஏதோ பிறந்துவிட்டோம் வாழ்வோம் என வாழ்வதா? எப்படியும் வாழலாம் என்பதா அல்லது இப்படித்தான் வாழவேண்டும் என வாழ்வதா? பொறுப்புணர்ச்சியுடன் பயணத்தைத் தொடர்வோம். சிந்தைகள் சந்திக்க வைக்கட்டும்; தொடர்பை வளர்க்கட்டும்.

— ஜெராட் றொசாயரோ, அ. ம. தி.

# கருத்துக் குவியல் - 10

## கருச் சிதைவு

× உருவாக்குபவர்களே அழிக்கிறார்கள்!

''பொறுப்புணர்ச்சி குறைந்தவர்களே கருச்சிதைவை ஆதரிக்கின்றார்கள்'' என்ற வாக்கியம் நாகரீகம் என்ற போர்வையிலே அநாகரீகத்தை நோக்கி நடைபோடும் இன்றைய மனித சமுதாயத்துக்கு கொடுக்கும் சாட்டை அடி. குழந்தை என்பது உணர்ச்சிகளின் உந்தலினால் ஏற்பட்ட ஒன்று அல்ல; பொறுப்புணர்ச்சி உள்ள பெற்றோரினால் பெறப்பட்டு, வளர்க்கப்பட வேண்டிய ஒன்று. ஆனால், இன்று, 'பெண்மையின் நிறைவு தாய்மையிலே' என்பதை மறந்து பெண்ணினமே பொல்லாத கொலைக்காரக் கூட்டமாக மாறிவருவதைக் காண்கின்றோம். ஒன்றுமே அறியாத அந்த பச்சிளம் சிசுக்களை தம் பொறுப்பற்ற தன்மைக்கு பலியாக்கிவிடுகின்றனர். தாம் ஈனும் குட்டிகளைத் தின்று விடும் சில மிருகங்களைப்போல, சில மனிதர்கள் தாம் உருவாக்கும் சிசுவை கருவிலே அழித்து விடுவதை கண்ணனையப் பார்க்கின்றோம். பொறுப்பற்ற தன்மையாலும் சோம்பேறித் தனத்தாலும் விஞ்ஞான வளர்ச்சியின் தொற்றுநோயான கருச்சிதைவுக்கு மனித இனம் அடிமையாவதைக் கண்டு வருந்தாமல் இருக்க முடியவில்லையே.

— செல்வி ராஜதுரை.

× சில வேளைகளில் சில பெண்கள் . . . .

சில மணமாகாத பெண்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முடியாத நிலையில் சில சந்தர்ப்பங்களில் உடலுறவுக்கு, ஆளாகி கர்ப்பம் தரிப்பதுண்டு. இவர்கள்

குடும்ப மானத்தை காப்பாற்றுவதற்காக அல்லது தம்மை, தாய் தந்தையரை நிரந்தரமாக இழக்காமல் இருப்பதற்காக கருச்சிதைவு செய்துகொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றனர்கள். கருச்சிதைவை ஆதரிப்பவர்கள் அனைவரும் பொறுப்புணர்ச்சி குறைந்தவர்கள் அல்லர். —எஸ். அல்பேட் குருஸ், தாழ்வுபாடு

× குழந்தை ஒரு முட்டுக்கட்டை?

மக்கள் தொகைப் பெருக்கம், பொருளாதார நெருக்கடி, குடும்ப நலம், குழந்தைகளின் நலம் எனப் பல காரணங்கள் காட்டி, பிறப்பைக் கட்டுப்படுத்த பலர் முனைகின்றனர். அவர்களில் சிலரது காரணங்கள் நியாயமானதாக விருக்கலாம். அல்லது சிலரைப் பொறுத்தவரை கருச்சிதைவு தவிர்க்கமுடியாததாகவிருக்கலாம். எனவே, கருச்சிதைவை ஆதரிக்கின்றவர்கள் அனைவரும் பொறுப்புணர்ச்சியற்றவர்கள் எனப் பொதுவாக கூற முடியாது. அதேவேளை, குழந்தைச் செல்வம் தங்கள் சுதந்திர வாழ்வுக்கு ஒரு முட்டுக்கட்டை என்று எண்ணி கருச்சிதைவை மேற்கொள்பவர்களை பொறுப்புணர்ச்சியற்றவர்கள் என்றே நான் கூறுவேன்.

— J. மேவின் லோவ், மாம்புரி.

× கருச்சிதைவு ஒரு கொலை

''கொலை செய்யாதே'' என்றே எல்லா மறைகளும் எமக்குக் கற்பிக்கின்றன. எனவே, கருச்சிதைவு என்ற சிசுக் கொலையை எக் காரணம் கொண்டும் ஆதரிக்க மாட்டேன். வாழவேண்டியவர்களை நாமாகவே மாள வைப்பது முறையா? நிச்சயமாக இல்லை. அது நீதிக்கு முரணானது.

— அமலா, நிலாவெளி

# யாருக்கு யார் காவல்?

— போல் ஜீவா —

''உடலுக்கு உயிர் காவல்; கடலுக்கு கரை காவல்; கண்ணுக்கு இமை காவல்'' என்று இயற்கையிலேயே ஒன்றிற்கு இன்னொன்று காவல், ''இன்னார்க்கு இன்னார் பொறுப்பு'' என்று வகுக்கப்பட்டுள்ளது.

தான் தனித்து வாழமுடியாது என்றும் தான் வாழ, வளர அடுத்தவர் (the other) தேவை என்பதையும் உணர் கின்றான் மனிதன். அவ்வேளை மற்றவர் வாழ, வளர தான் தேவைப்படுகின்றான் என்பதை உணரும்போது அவன் பொறுப்புணர்ச்சி உள்ளவனாகின்றான்.

பின்கறேற் (Fingarette) என்னும் உளவியலறிஞர் கூற்றுப்படி ''பொறுப்புணர்ச்சி என்பது ஒன்றுமில்லாமைக் குள் குதிக்க விளைவதாகும்'' (Willingness to Leap into Nothingness) 'பிறர்,' 'எதிர்காலம்' இவைபற்றி முழுமை யாக நிர்ணயிக்க முடியாத விடத்து, பொறுப்பை ஏற்பது உண்மையில் ஒருவனது வீரச் செயலே.

பொறுப்பை உணரும் மனிதன் உண்மையில் பிறரின் தேவைகளுக்கும் சமுதாயத்தின் கோரிக்கைகளுக்கும் நேர்மை யுடன் செவிசாய்க்கின்றான்.

உதாரணமாக, ஒரு குடும்பத்தில், தந்தை, தாய், மூத்த வன், உடன்பிறந்தவன், மகன், மகள் . . . . ஒவ்வொரு வருக்கும் அவரவர் நிலைக்கேற்ப உரிமைகள், கடமைகள் உண்டு. ''குடும்பம் என்னிடம் கேட்பது என்ன?'' இக் கேள்விக்கு ஒருவன் தனது உள்ளத்தின் அடியிலிருந்து பதில் கொடுக்கும்போது மனிதனுக்கே உரிய தனித்துவ ஆற்ற

லான பொறுப்புணர்ச்சியை அவன் தட்டியெழுப்புகின்றான். அதேவேளை அவனுடன் வாழும் பல்வேறு நிலையில் உள்ள பல்வேறு தேவைகளைக் கொண்ட மனிதர்கள் அவனிடம் நீதி, உதவி, ஒத்துழைப்பு வேண்டி நிற்கும்போது அவனிட மிருந்து எதிர்பார்ப்பது பொறுப்புணர்வுள்ள பதிலையே.

பிறப்பினாலேயே உரிமை கொண்டாடும் சமுதாயம் அதன் உறுப்பினரிடமிருந்து என்னத்தைக் கோருகின்றது? வாழையடி வாழையாக சமுதாயத்து வளர்ச்சி தொடர்ந்தாலும் காலத்தின் மாறுதலுக்கேற்ப ஒப்புரவான முறையில் அதன் நீடித்த ஆயுள் வளர்வது அதன் உறுப்பினர் கைகளில்தான் உள்ளது.

தொழிலாளர் சமுதாயத்தை வளம்படுத்த, மாணவர்கள் அறிவில் வளர்ந்து அறிவைப் பெருக்க இவ்வாறு சமுதாயத் தின் ஒவ்வொரு நிலையில் உள்ளவர்களும் தமக்கென்று ஒதுக்கப்பட்ட சிறந்த பணியை நேர்மையுடன் சீராகச் சமைக்க எதிர்பார்க்கப்படுகின்றார்கள்.

இவ்வாறு மனித வளர்ச்சியில் ஒருவருக்கு ஒருவர் காவலாய் இருப்பினும் ஜோ கறிஸ் (Joe-Harry's) கூற்றுப் படி "ஒவ்வொருவனிலும் ஒரு பகுதி அவனுக்கு மட்டுமே புரியக் கூடியதாய் இருப்பதால்," அவன் குறைகளை நிவர்த்தி செய்ய, அவன் ஆற்றல்களை நிறைவு செய்து வளம்படுத்த அவனது சொந்தத் தனி முயற்சி அவசியமா கின்றது. ஒருவன் தனது உள்மனத்தோடு அந்தரங்க ரீதி யில் உறவாடும்போது சுய உருவாக்கல் உருவாகின்றது. இன்றைய சுதந்திர சமுதாயத்தில் சிந்திக்கும் மனிதன் சுயமாகத் தன் வாழ்க்கையைக் கட்டியெழுப்புதலையே (Self-Formation) சமுதாயம் விரும்புகின்றது. இவ்வாறு ஒருவன் மற்றவருக்கு மட்டுமல்ல, ஒருவன் தனக்கும் காவ லாய், பொறுப்புள்ளவனாய் இருக்கின்றான். பொறுப்பை உணர்ந்தவன் தலையை அசைத்து, சிந்தனைமட்டத்தோடு நின்றுவிடமாட்டான். அது வாழ்க்கையின் முதலீட்டிற்கும் ஈடுபாட்டிற்கும் இட்டுச்செல்லும்; அவனது வாழ்க்கை வளர்ச்சியும், மகிழ்ச்சியும் இரட்டிப்பாகும்.

வாழ்க்கையை ஒரு பாரச் சுமையாக எண்ணி, அல்லும் பகலும் அங்கலாய்க்கும் பேதைகளுக்கு பொறுப்பு ஒரு சுமை ; சுவை அல்ல.

— இ. மாகிறற், யாழ்ப்பாணம்.

பொறுப்புணர்ச்சி இல்லாத எவரும் ஆற்றில் கரைத்து விட்ட புளிக்கு ஒப்பானவர்.

— P. சகுந்தலாதேவி, புங்குடுதீவு - 10


குழந்தைப்பருவ இதயத்தை எவன் இழக்காமலிருக்கிருனே அவனே உயர்ந்த மனிதன்.

— மென்ஜியஸ்.

# கருத்துக் குவியல் 11

உள்ளமே அனைத்து நோய்களுக்கும் ஊற்று

உங்கள் கருத்துக்களை உடனே எழுதி அனுப்புங்கள்




## குறுக்கெழுத்துப் போட்டி

## 3

1. உலகில் பலர் இது இல்லாமல் வாழ்வதைக் கண்டோ என்னமோ, இங்கு கடைசி எழுத்து இல்லாமல் போய்விட்டது. (இடமிருந்து வலம்)

1. தலைவர்களின் உயர் குணங்களில் ஒன்று. (மேலிருந்து கீழ்)

2. நாளை என்று பின்போடுவதைவிட்டு ———— செய்வதே நன்று. (வலமிருந்து இடம்)

3. ஒருவன் நல்லதைச் செய்வதைக் கண்ட பின்பும் அதனை ———— என்று கூற நாம் ஏன் பின்வாங்க வேண்டும்? (கீழிலிருந்து மேல்)

குறிப்பு: அஞ்சல் அட்டையில் மேற்காட்டப்பட்டபடி சதுரங்களை அமைத்து, சரியான எழுத்துக்களால் நிரப்பி, கார்த்திகை 5ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வையுங்கள்.

# “நான்” - கருத்தரங்கு

“நான்” வாசகர்கள், எழுத்தாளர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

**ஆரம்பம்: 3-1-81 மாலை 4.00 மணிக்கு**

**முடிவு: 4-1-81 பி. ப. 12.30 மணிக்கு**

**இடம்: அ. ம. தி. பயிற்சியகம், அம்பிட்டிய.**

**ஆராயும் விடயங்கள்:—**

- மனித வளர்ச்சியில் எனது பங்கு.
- சமுதாயத்துச் சலனங்கள்.
- ‘‘நான்’’ இன் உருவாக்கல்.

குறிப்பு: இடவசதி இலவசம்.
*சாப்பாட்டுச் செலவு ரூபா 10/—*
*பெண்களுக்குப் பிரத்தியேகமான தங்க வசதி.*

*பின்வரும் விண்ணப்பப் படிவத்தை நிரப்பி மார்கழி மார்கழி 1ந் திகதிக்கு முன்னர் அனுப்பிவையுங்கள்.*

—————— இங்கே கத்தரிக்கவும் ——————

## விண்ணப்பப் படிவம்

(தெளிவாக எழுதவும்)

பெயர்: ..............................................................

முகவரி: ..............................................................

தொழில்: ..............................................................

வயது: ..................          பால்: ..................

# வாசகர் பூங்கா

அனுதாபங்கள் ——

வாசன் அவர்களுக்கு எனது அனுதாபங்கள். காலத்தைப் பொன்னாக மதிக்கும் இக்காலத்தில் உம்மைப் போன்ற பரிதாபத்துக்குரியவர்களும் வாழத்தான் செய்கிறார்கள்.

— இந்திராணி மெத்தியு.

பாதை ——

''நான்'' மலரில் வெளிவரும் கருத்துக்கள் அனைத்தும் இன்றைய இளைஞருக்கு வழி காட்டும் முன்னேற்றப் பாதையாகும்.

— T. ஜோசப் மேரியன்
உடவேரிய ஓஹிய.

வருந்துகின்றேன் ——

'வாழ்க்கை எனும் ஓடத்தில்' உதித்த மகேஷின் மறைவை எண்ணி வருந்துகின்றேன்.

— இரவீந்திரன், கன்னியா.

மறவேன் ——

கடந்த மாதம் நான் கண்டிக்கு விஜயம் செய்த போது வெரோ அவர்கள் ''நான்'' ஆகிய உன்னை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். அவரை மறந்தாலும் உன்னை மறவேன்.

— செல்வி M. S. வில்லியம்
அட்டபாகை.

நல்ல பாடம் ——

''வாழ்க்கை எனும் ஓடத்தில்'' சிறுகதை, குடிபோதைக்கு அடிமையாகி, குடும்ப வாழ்வைச் சிதைவுறுத்தும் குடும்பத்துத் தலைவர்களுக்கு ஒரு நல்ல பாடம்.

P. S. தேவி, ஜான்ஷன், புங்கையூர்.

# USHA BRANCH

**268, Katugastota Road,**

**KANDY.**

**WE UNDERTAKE REPAIRS**
**TO**
**SEWING MACHINES FANS**

***REFRIGERATORS &***
***DEEP FREEZERS.***

**M. H. M. SHUHOOD**
*Sub-Distributor for*
**M/s Rowlands Ltd.**


பிராவி அச்சகம், 274, டீ. எஸ். சேனநாயக்க வீதி, கண்டி.

அன்பு நேயர் R. Nagendraiyer

தங்கள் சந்தா முடிவடைந்து விட்டதை இத்தால் நினைவூட்டுகின்றோம். தயவுசெய்து, பணத்தை அனுப்பி "நான்" சந்தாவைப் புதுப் பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

—ஆசிரியர்